RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1861

OPEN ACCESS

# திருமங்கையாழ்வார் பாசுரங்கள் காட்டும் வைணவத் திருத்தலங்கள்

ப. ராஜேஸ்வரி [அ, *], சே. தெய்வக்கன்னி [அ]

[அ] தமிழ்த்துறை, தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தை கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தஞ்சாவூர்-613002, தமிழ்நாடு, இந்தியா.

# Vaishnava Temples in the Scriptures of Thirumangaiyazhwar

**B. Rajeswari [a, *], X. Deivakkanni [a]**

[a] Department of Tamil, Tamilavel Umamaheswaranar Karanthai Arts College, (Affiliated to Bharathidasan University), Thanjavur-613002, Tamil Nadu, India

* Corresponding Author: rajibalaraman8@gmail.com

Received: 01-07-2022
Revised: 28-10-2022
Accepted: 12-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Thiruvillipputtur, Periyazhavar temple's gopuram is a symbol of Tamil Nadu, a state where Saivism and Vaishnavism flourished. Vaishnava temples chanted by the twelve Aalwars are called Divya Desams and the temples chanted by the Thirumuraigal are called Thirumurai Thalangal. Total there are 108 temples in Divya Desam. Of these there are 46 temples in the Chola country. Tirumangai Alwar sang many songs about such sanctuaries. He is notable among the twelve Alwars. In this article titled "Vaishnava Temples in the Scriptures of Tirumangaiyazhwar", is said about the visit of Thirumangaiyazhwar to the shrines, and the fact that he saw the three three devotees in the temple and fell in love with them in devotional ecstasy and sang heartily about devotees and about the shrines. The article clearly states how Thirumangaiyazhwar has sung about Tirupati Perumal, Tirunaraiyur Nambi who excelled in the service of stone carvings, Trucherai Saranathan who appeared as a groom and about Tirukannapurathan in his hymns.

**Keywords:** Arena, Alwars, Tirupatis, Thirumal, Holy Waters

## முன்னுரை

இயற்கையின் பலதரப்பட்ட படைப்புகளில் நம்மை வியக்க வைப்பதும், ஆராய்ச்சிக்குத் தூண்டுவதும் இந்த பிரபஞ்சம் தான். இந்த உலகம் நிலம், நீர், தீ, வான், காற்று ஆகிய பஞ்சபூதங்களின் கூட்டினால் உருவாகி இருக்கிறது. மனிதனும் இதன் ஒரு அம்சம்தான். இதைத்தான் மகான்களும், சித்தர்களும் அண்டத்தில் இருப்பதே பிண்டத்திலும் இருக்கிறது என்று சூசகமாகத் தெரிவித்தனர். மனித உடம்பும் பஞ்சபூதங்களின் அடிப்படையில் தான் கட்டமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதில் நிலம் என்பது நமது உடம்பு, நீர் என்பது இரத்தம், சிறுநீர், வியர்வை, காற்று என்பதே சுவாசம், அக்கினியாகிய தீ என்பதே உடலின் வெப்பசக்தி, ஆகாயம் என்பதே மனம் ஆக இந்த ஐம்பூதங்களும் மனித உடலில் இருந்து அவனை இயக்குகின்றன.

அத்தகைய மனிதனுக்கு அமைதியைக் கொடுத்து நல்வழிகாட்டி, அவனைச் சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டிகளே மதங்கள். இந்து சமயம் ஆறு மதங்களை அறிமுகப்படுத்துகிறது. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என்பவை அவை. இதில் வைணவ சமயம் திருமாலைத் தலைவனாகக் கொண்டது. வேத காலத்திலிருந்தே வைணவம் இருந்திருப்பதற்குச் சான்றுகள் உள்ளன. மனிதனுக்கு நல்ல வழிகளை அறிமுகப்படுத்தவும், எண்ணங்களைச் சீர்படுத்தி அவனை வாழ்வாங்கு வாழ வைக்கவும் வைணவம் பெரிதும் முயற்சி எடுக்கிறது. இவ்வழியில்

பெருமாள் கோயில் இல்லாத கிராமத்தை நம் தமிழகத்தில் பார்ப்பது அரிது. மகாவிஷ்ணு ஒரு அலங்காரப் பிரியர், எப்போதும் திருப்பாற்கடலிலே இருப்பவர் திருமால்.

பூமியில் இறைவன் எழுந்தருளி இருக்கின்ற தலங்களுக்கெல்லாம் சென்று அவனைத் தரிசித்துப் பாசுரங்கள் பாடி வழிபட்டவர்கள் ஆழ்வார்கள். இந்த வகையில் ஆழ்வார்களின் பாசுரம் சூட்டப்பட்ட பெருமாள் மங்களாசாசனம் செய்யப்பட்டவர் என்று அழைக்கப்படுகிறார். அந்தத் தலம் திவ்யதேசம் என்ற பெருமையை அடைகிறது. அங்கே எம்பெருமான் நித்யவாசம் செய்கிறான். இதற்குக் காரணம் ஆழ்வார்கள் எம்பெருமானின் ஒரு அம்சமே ஆவர். இவ்வழியில் திருமங்கையாழ்வார் குறிப்பிடத்தக்கவர். அவர் 108 திவ்விய தேசங்களில் பெரும்பான்மையான பாசுரங்களைப் பாடியுள்ளார்.

## திருமங்கையாழ்வார்

"தினமும் ஆயிரத்தெட்டு அடியார்க்கமுத ளித்தவரே போற்றி

மனமுவந்து அரங்கனுக்கு மதிலமைத்தவரே போற்றி

இனமெனும் தொழிலையும் விடுத்திடாதவரே போற்றி

குணமெனும் குன்றேறி திருமங்கையாரே போற்றி"

சோழநாட்டில் திருவாலி திருநகரிக்கு அருகில் உள்ள திருகுறையலூரில் ஆலிநாடுடையார் (Ramu, 2013)-வல்லித்திரு அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். சோழ முத்தரையர் மன்னர்கள் மற்றும் பரமேசுவரன், நந்திவர்மன் போன்ற பல்லவ மன்னர்களைப் பற்றிய செய்திகள் இவர் பாடல்களில் காணக்கிடப்பதால் இவரை எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர் என்று வரலாறு கூற்று எடுத்துரைக்கிறது. இவர் நள வருஷத்தில் கார்த்திகை மாதம் பௌர்ணமியும் கார்த்திகை நட்சத்திரமும் சேர்ந்த தினத்தில் அவதரித்தவர். அரசகுல மரபினரான முத்தரையர் வம்சாவழியில் பிறந்ததாக குறிப்புகள் உள்ளன. இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் நீலன். இளம் வயதிலே போர்த் திறமைகளுடன் விளங்கினார். தந்தைக்குப் பின தமது சோழ முத்தரையர் மரபு மன்னனின் சேனாதிபதியாக அமர்ந்து பல போர்களில் வெற்றி பெற்று பரகாலன் (எதிரிகளின் எமன்) என்ற பெயர் பெற்றார். இவருடைய வீரத்துக்குப் பரிசாக முத்தரைய சோழ மன்னன் இவரைத் திருமங்கை நாடு என்னும் குறுநிலத்திற்கு அரசனாக முடிசூட்டினார். ஆழ்வார்களிலேயே மிகவும் சிறப்புடையவர் திருமங்கை மன்னன். ஆழ்வார் பாடல்கள், வைணவ ஆலயங்களின் பழமையை நிரூபிக்கும் சரித்திரச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## திருமங்கை மன்னரும் வைணவ காதலும்

குமுதவல்லி எனும் மங்கைமீது கொண்ட காதல் விளைவு வைணவம் அனுசரிக்க ஆரம்பித்தவர், அவளின் விருப்பத்தின்படி திருமாலின் அடியார்களுக்கு நாள்தோறும் அன்னம் வழங்கியதுடன், திருக்கோயில் கைங்கரியங்களில் ஈடுபடவதையும் செய்து வரலானார். காலப்பொழுதில் தன்னை முழுமையாக இதில் ஈடுபடுத்திக் கொண்டு, தன் செல்வங்களையும், அரசு செல்வங்களையம் முழுக்க இழந்தவரானார். இறைப்பணி கடமையை நிறைவேற்ற யாசகமும் கைக்கொடுக்காதபடியால் களவாடியாவது அடியவர்களுக்கு தினமும் அன்னம் இடுவதையும், திருவரங்கத் திருக்கோயிலின் கைங்கரியங்களையும் செய்ய எண்ணினார். இதனால் திருடன் வேடம் தரித்து செல்வந்தரிடம் கள்ளனாகச் சென்று செல்வங்களைக் களவாடினார். இச்செயலை மெச்சி, இறைவனே இவர் களவாடும் பாதையில் வந்து, இவரை ஆட்கொண்டதோடு வேண்டிய செல்வங்களையும் கொடுத்தருளினார்.

## இறைப்பணியில் சிறந்த திருமங்கை மன்னர்

பெருமாளின் 108 திருப்பதிகளில் திருமங்கை ஆழ்வார் தனியாகச் சென்று 46 கோயில்களையும், மற்ற ஆழ்வார்களுடன் சேர்ந்து 36 கோயில்களையும் என மொத்தம் 82 கோயில்களை மங்களாசாசனம்

செய்துள்ளார். 12 ஆழ்வார்களில் இவர்தான் அதிக பெருமாள் திருத்தலங்களை மங்களாசாசனம் செய்துள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றில் சில தலங்களை இக்கட்டுரையில் காண்போம்

## திருமாலுக்குரிய திருத்தலங்கள்

திருத்தலங்கள் திருமாலுக்குரியன மொத்தம் நூற்று எட்டாகும்.

"ஈரிருபதாஞ்சோழ மீரொன்பதாம் பாண்டி

மோர்பதின்மூன்றா மலைநா டோரிரண்டஞ் சீர்நடுநா

டாறோடீரெட்டுத் தொண்டையன் வடநாடாறிரண்டு

கூறுதிரு நாடொன்றாக் கொள்"

சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பது, பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு, மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று, நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்திரண்டு, வடநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று ஆக வைணவத் திருத்தலங்கள் நூற்று எட்டாகும் (Subbu Chettiyar, 1981).

## திருமங்கை பாசுரங்களின் வைணவத் திருத்தலங்கள்

திருமங்கையாழ்வார் ஆழ்வார்களிலேயே அதிக அளவுக்குத் திருத்தல தரிசனம் பெற்று, அத்திருத்தல மூர்த்திகளைக் கண்ணாரக் கண்டு பக்திப் பரவசத்தில் அவர்களிடத்து ஆழங்கால்பட்டு அவனையும், அவனது திருத்தலங்களையம் மனங்குளிர வாயார பாடிக்களித்தவர். இவர் சென்ற கண்ட திருத்தலங்கள் மொத்தம் எண்பத்தாறாகும். மானிடர் செல்வதற்கு மிகவும் அரியதாயுள்ள திருத்தலங்களையம் இவர் நேரில் சென்று கண்டாற்போல் பாடியுள்ளார். தனது பக்திக் கவித்திறத்தால் அவர்களைப் பற்றிய தமது கேள்வி ஞானத்தால் ஆழ்வார் அவ்வாறு பாடி இருக்க வாய்ப்பிருக்கிறது. அவற்றின் சிறப்பு பற்றியும் ஆழ்வாரால் அவை பாடப்பட்ட நிலைகளையும் ஈண்டு திருத்தலங்களை அமைத்த முறையிலேயே ஆய்வானது அமைத்துச் செல்கிறது. அவையாவன

## அரங்கம்

ஸ்ரீவைணவ திவ்ய தேசங்களில் முதன்மையானது இத்தலமாம். 'கோயில்' எனச் சிறப்புப் பெயருடன் விளங்குவதும் இதுவேயாகும். திருவரங்கம் விளக்கம், சிறப்புக்கள், ஆழ்வார் திருமங்கை பாசுரங்களில் திருவரங்கம் பெறுமிடம் ஆகியன ஈண்டுக் கூறப்பெறுகின்றன

## திருவரங்கம்

சோழநாட்டு தலங்களுள் முதன்மையானது திருவரங்கத் திருத்தலம், மூலவர், ஸ்ரீரங்கநாதன், புஜங்கசயனம், தெற்கு நோக்கித் திருமுக மண்டலம், தாயார் - ஸ்ரீரங்கநாயகி, தீர்த்தங்கள் அத்ர புஷ்கரிணி; காவிரி, கொள்ளிடம், தலவிருட்சம் - புன்னை, விமானம் - பிரணவாஸ்குதி, தர்மவர்மா, ரவிதர்மன், சந்த்ரன், விபீடணன் முதலியோருக்கு இத்தலத்திறைவனது திருக்காட்சி கிடைத்தது என்பர் (Srivatsan, 1990).

இத்தலம் திருமால் திருவுள்ளம் உவந்து தங்கிய இடமாதலால் திருவரங்கம் எனப் பெயர் பெற்றது. "திருமகனார் திருநிருத்தஞ் செய்யும் இடமாய் இருத்தலாலும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவுக்குக் கூத்துப் பலியிடமாயிருத்தலாலும், ஆற்றிடைக் குறையாதலாலும் திருவரங்கம் எனப் பெயர் பெற்றது". திருவரங்கம் என்பதில் திரு என்பது சிறப்பு கருதி வழங்கப்படும் சொல்லாகும். அரங்கத்திற்கு அடைமொழி ஆகும். அரங்கம் என்ற சொல்லுக்கு அம்பலம், சபை என்று பொருள், சைவர்களுக்குத் தில்லை விளங்குவது போல் வைணவர்களுக்கு அரங்கம் விளங்குகிறது. மேலும்

இத்தலம் திருமாலின் திருப்பதிகள் நூற்று எட்டனுள் தலைமையானதாகும். சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானது. பூலோக வைகுண்டம், போக மண்டபம் என்று சிறப்பித்து வழங்கக்கூடியதும், ஸ்வயம்வ்யக்த சேத்திரம் எட்டனுள் ஒன்றானதும் ஆகும்.

## சிறப்புக்கள்

திருவரங்கநாதனை மதுரகவியாழ்வார் தவிர மற்றப் பதினோரு ஆழ்வார்களும் பாடிப் பரவியுள்ளனர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பாடப்பட்ட தலங்களுள் பாசுர எண்ணிக்கையில் முதலிடம் பெறுவது திருவரங்கமாகும். திருவரங்கம் பற்றிப் பெரியாழ்வார் முப்பத்தைந்து பாசுரங்களும், ஆண்டாள் பத்து பாசுரங்களும், திருமங்கையாழ்வார் பதினான்கு பாசுரங்களும், தொண்டரடிப் பொடியாழ்வார் ஐம்பத்தைந்து பாசுரங்களும், திருப்பாணாழ்வார் பத்து பாசுரங்களும், திருமங்கையாழ்வார் ஒரு பாசுரமும், பூதத்தாழ்வார் நான்கு பாசுரங்களும், பேயாழ்வார் இரண்டு பாசுரங்களும், நம்மாழ்வார் பன்னிரண்டு பாசுரங்களும் பாடியுள்ளனர்.

திவ்வியகவிப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கம் பற்றிப் பாடிச் சிறப்பித்த நூல்கள் பல. அவை திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்து மாலை, ஸ்ரீரங்கநாயகர் ஊசல் ஆகியன. பெரிய நம்பிகள், பட்டர் பெருமான், பிள்ளை லோகாச்சாரியார், வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆகியோர் இத்திருத்தலத்தில் பிறந்தவர்களாவர். கம்பன் தன் இராமகாதையை அரங்கேற்றிய பெருமையும் இத்தலத்திற்குண்டு. இத்தலத்தின் சிறப்பினை, பெருமையைப் பேசக்கூடிய தகுதி நான்முகன் ஒருவனுக்கே உண்டு என்கிறது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி (Srinevasa Iyer, 1982).

தொண்டரடிப் பொடியாழ்வார் நந்தவன கைங்கர்யமும் திருமங்கையின் திருமதில் கைங்கரியமும் பெற்றத் திருத்தலமிது. இவ்வாலயத்தின் வடக்குப் பக்க பரமபத வாசலில் விரஜாநதி இருப்பதாக ஐதீகம். கம்பராமாயண அரங்கேற்றத்தின் போது சிரக்கம்பம் செய்து ஆமோதித்த 'மேட்டு அழகிய சிங்கர்' என்னும் ஸ்ரீநரசிம்மமூர்த்தி இங்கு கோவில் கொணடுள்ளார் (Srivatsan, 1990).

## திருமங்கை பாசுரங்களில் திருவரங்கம்

திருமங்கைப் பாசுரங்களில் திருவரங்கத்தின் இயற்கை எழில், செல்வ வளம் ஆகியன பின்வருமாறு சுவைபடக் கூறப்பெறுகின்றன. காவிரி நதியினால் சூழப்பெற்றது, அழகிய சோலைகள் மிக்கது, அக்காவிரி நதியானது சந்தன மரங்கள், நவமணிகள், யானைத் தந்தங்கள், அகில் மரங்கள், மூங்கிலில் நின்று திரிந்த முத்துக்கள், இரத்தினங்கள் முதலியவற்றைத் தள்ளிக் கொண்டும், வாழைச் சோழைகட்குள் புகுந்து அவற்றை வேரோடு சாய்த்தும் பாய்ந்து செல்கிறது. அவ்வாறு சோலைகளில் புகுந்து வருவதால் மதுவோடு பெருகும் இந்நதியினை வண்டுகள் வந்து மொய்க்கின்றன. மேலும் இந்நதி மலர்களைக் கூந்தலில் சூடி, முலைகளில் குங்குமச் சேறு பூசியபடி விளங்கும் மாதர்கள் வந்து நீராடலால் குங்கும நிறத்தைத் தாங்கி ஓடும் தன்மையது. இவ்வாறு இந்நதி பாய்தலால் வளம்பெற்ற வயல்கள் திருவரங்கத்தில் மலிந்திருக்கின்றனவாம். மேக மண்டலத்தை அளாவியிருக்கின்ற மாளிகைகளை உடையது (Annangaracharian, 1956). அம்மாளிகைகளில் உண்டான அதிகமான அகிற்புகையும், சிறந்த வைதிக பிராமணர்கள் நடத்தும் யாகங்களில் உண்டான ஹோமதூபமும் சேர்ந்து பரிணமிக்கின்றன (Annangaracharian, 1956).

திருவரங்கம் நல்ல செம்பொன்னோடு ஒத்த மதில்களால் சூழப்பெற்றது என திருவரங்கம் மதிலை அரணாகப் பெற்றிருப்பதைக் கூறுகிறார். திருவரங்கம்-பிரமன் முதலிய விண்ணவராலும் மண்ணவராலும் வணங்கப் பெறுவது என மேலும் அதனைச் சிறப்பித்துப் பேசுகிறார் ஆழ்வார் திருமங்கை (Annangaracharian, 1956).

## திருவிண்ணகர்

சோழநாட்டுத் திருப்பதிகளுள் இத்தலமும் ஒன்று, இத்தலத்தைப் பிரம்மனே அமைத்து விண்ணகரம் என அழைத்ததாய் வரலாறு உண்டு. காசிவனம், மார்க்கண்டேய சேத்திரம் என்றும் இத்தலம் அழைக்கப்பெறுகிறது (Srivatsan, 1990). மூவர் ஒப்பிலியப்பன், ஸ்ரீநிவாஸன், தாயார் - பூமிதேவி, தீர்த்தம் - விஷ்ணுவிமானம், மார்க்கண்டேயருக்கும், பெரிய திருவடிகட்கும், காவிரி, தர்மதேவதைக்கும் இத்தலத்து இறைவனது திருக்காட்சி கிடைத்ததாகச் செய்தி உண்டு.

இத்தலத்திறைவன் திருப்பதி ஸ்ரீநிவாசருக்குத் தமையனார் என்பர். மிருகண்டு முனிவனின் மனைவி விருப்பப்படி உப்பில்லாத பிரசாதம் நிவேதனம் செய்யப்படுவதால் இத்தலத்து எம்பிரானுக்கு உப்பிலியப்பன் எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இங்குப் பெருமாளைச் சேவிக்க வருபவர்கள் கோவிலுள் உப்பையோ, உப்பு சேர்த்த உணவையோ கொண்டு சென்றால் அவர்கட்கு நரகம் கிட்டுமெனப் புராணம் கூறுகிறது. திருமங்கை, பேய், நம்மாழ்வாரால் இத்தலம் மொத்தம் நாற்பத்தேழு பாசுரங்களால் பாடப்பெற்றுள்ளது (Srivatsan, 1990).

## திருமங்கை பாசுரங்களில் திருவிண்ணகர்

“வருபுனல் சூழ் திருவிண்ணகரானே”

என இத்தல நீர்வளச் சீரினைப் பாடிக் களிக்கிறார் ஆழ்வார் (Loganayagi, 1992).

## திருநறையூர்

மூலவர் - தீருநரையூர்நம்பி. நின்ற திருக்கோலம், தாயாரை மணந்து கொள்ளும் நிலை, கிழக்கே திருமுகமண்டலம், தாயார் - வஞ்ஜுளவல்லி தீர்த்தம் - மணிமுக்தா புஷகரிணி, ஸங்கர்ஷணதீர்த்தம், ப்ரத்யும்னதீர்த்தம், அநிருத்த தீர்த்தம், ஸாம்ப தீர்த்தம், விமானம் - ஸ்ரீநிவாஸ விமானம், மேதான முனிவருக்கும், பிரம்மாவிற்கும் இத்தலத்து இறைவனது திருக்காட்சி கிடைத்தது. நறையூர்நம்பிக்கு அணிவிக்கத் திருப்பாற்கடலிலிருந்து வைரமுடியைக் கருடாழ்வார் எடுத்துப் போகையில், அதிலுள்ள மணி ஒன்று விழுந்ததால் அத்திருக்குளம் மணிமுத்தாளானது என இத்தலம் பற்றிய தலவரலாறு கூறுகிறது (Annangarachariar, 1956).

மேதானமுனியின் வளர்ப்பு மகளான வஞ்ஜுலவல்லியைப் பகவான் தனது நிலையில், ஸங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன், புருஷோத்தமன், வாஸுதேவன் என்ற ஐந்து உருவங்களில் வந்து மணந்து கொள்கிறார் என்பர் (Srivatsan, 1990).

சுகந்தகிரி நறையூரானது என்பர். சுகந்தம் - நறுமணம். தமிழில் இதுவே நறையூர் எனப் பெயர் பெற்றதாம் (Subbu Chettiyar, 1981). இத்தலம் ஸ்ரீநினிவாசனுக்கு மட்டும்தான் உகந்ததன்று, ஸ்ரீதேவிக்கும் தேன் அனைய இருப்பதாவது பற்றி நறையூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். திருமங்கை மொத்தம் நூற்று பத்துப் பாசுரங்களால் நம்பியை மங்களாசாசனம் செய்கிறார் (Subbu Chettiyar, 1981).

## திருமங்கையாழ்வார் பாசுரங்களில் திருநறையூர்

ஆழ்வார் திருநறையூர் வளமிக்கது. சோலை எழில் உடையது. செல்வச் சீருடையது. அழகிலும் ஒழுக்கத்திலும் சிறந்த குடிமக்களைப் பெற்றது என்கிறார். திருநறையூர் திருத்தலத்து வயல்களில் வரால்-வாளை மீன்கள் பாய்ந்த வண்ணமிருக்கின்றன. அன்னங்கள் நெருக்கமாய் மலர்ந்துள்ள நெய்தல் மலர்களின் மதுவினை உண்டு, தாமரை மலர்மீது உறங்குகின்றன (Annangarachariar, 1956).

“பெடையடர்த்த மடவண்ணம் பிரியாது மலர்க்கமலம்

மடலெடுத்து மதுநுகரும் வயலுடுத்த திருயூர்”

“சீர் தழைத்து கதிர்ச்செந்நெல் செங்கமலத் திடையிடயின்

பார்தழைத்துக் கடும்போங்கிப் பயன்விளைக்கும் திருநறையூர்” (Annangarachariar, 1956)

இவ்வாறு நறையூரின் வயல்வளத்தை ஆழ்வார் ஒருசில காட்சிகளைக் காட்சிப் பேசுகிறார்.

நறையூர் பொழில்கள் மிக்கது என்பதை ஆழ்வார்,

“சினையார் தேமாஞ் செந்தளிர் கோதிக் குயில்கூவும்

நனையார் சோலை சூழ்ந்தழ காய - நறையூரே!

பொரியர் மஞ்ஞை பூம்பொழில் தோறும் நடமாட

நறுகாண் மலர்மேல் வண்டிசை பாடும் - நறையூரே!

பொந்தில் வாழும் பிள்ளைக்காகிப் புன்னோடி

நந்து வாகும் பைம்புனல் வாவி - நறையூரே” (Annangarachariar, 1956).

## திருச்சேறை

சோழநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றான திருத்தலத்தின் மூலவர் - சாரநாதன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுகமண்டலம், தாயார் - சாரநாயகி, தீர்த்தம் - சாரபுஷ்கரணி, விமானம் - சார விமானம், காவிரிக்கும், மார்க்கண்டேயருக்கும் இத்தலத்து இறையினது திருக்காட்சி கிடைத்தது.

பிரளய காலத்தில் இவ்வூரின் கெட்டியான மண்ணைக் கொண்டு ஒரு குடம் செய்து அதில் வேதங்கள் வைத்துக் காப்பாற்றப்பட்டதாகப் புராண வரலாறு, சாரபுஷ்கரணியில் நீராடி இறைவனை வணங்கினால் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்பர் (Srivatsan, 1990). திருமங்கை மொத்தம் பதின்மூன்று பாசுரங்களால் இத்தலத்திறையை இறைஞ்சுகிறார்.

## திருமங்கை பாசுரங்களில் திருச்சேறை

திருமங்கை பாசுரங்களில் திருச்சேறையின் செல்வ வளத்தைக் கூறவந்த ஆழ்வார், அத்தலத்தின் மாடங்களில் உயர்வினை உயர்வு நவிற்சியாகப் பாடி மகிழ்கிறார்.

“வீண்சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு

மணிமாட மல்கு செல்வத்

தண்சேறை யெம்பெருமான்”

மணிமாடங்கள் இளந்திங்கள் அகடுரிஞ்சும் அளவிற்கு விண்ணைமுட்டும் வண்ணம் உயர்ந்துள்ளனவாம் (Annangarachariar, 1956),

சேறையின் சோலையழகைப் பாடவந்தவர்,

“வம்பலரும் தண்சோலை வண்சேறை

வானுந்து கோயில் மேய

எம்பெருமான்”

எனப் பாடிக் களிக்கிறார் (Annangarachariar, 1956).

திருச்சேறையின் அழகிய சோலைகளில் பூத்துக் குலுங்கும் மலர்களொடு வண்டுகள் இணைகின்றனவாம். அவ்வண்டுகள் பண்பாடிய வண்ணம் அச்சோலைகளில் அங்குமிங்கும் பறந்து களிக்கின்றனவாம் (Annangarachariar, 1956).

திருச்சேறையின் அழகிய சோலைகளில் பூத்துக் குலுங்கும் மலர்களோடு வண்டுகள் இணைகின்றனவாம், அவ்வண்டுகள் பண்பாடிய வண்ணம் அச்சோலைகளில் அங்குமிங்கும் பரந்து

களிக்கின்றனவாம். இவ்வாறு இத்தலத்தின் செல்வவளம், சோலை எழில் ஆகியன சிறப்பாகப் பேசப்படுகின்றன.

## திருக்கண்ணபுரம்

இத்தலம் மாயூரம்-காரைக்குடி இருப்புப்பாதையில் உள்ள நன்னிலம் என்னும் இரயில் நிலையத்தில் இருந்து கிழக்கே ஐந்து கல் தொலைவில் அமைந்துள்ளது. கிருஷ்ணாரண்ய சேத்திரம் என்றும், அஷ்டாஷர மகா மந்திர சித்தி சேத்திரம் என்றும் இத்தலம் கீழைவீடாய் இருக்கிறது. மகரிஷிகள் பலர் இங்கு விரும்பி தவம் செய்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. முக்திதரும் தலங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

கண்ணபிரான் எழுந்தருளியுள்ள தலமாதலால் இத்தலம் கண்ணபுரம் எனப் பெயர் பெற்றிருக்கலாம். நாலாயிரத்துள் இத்தலம் பற்றி வரும் பாசுரங்கள் மொத்தம் நூற்று இருபத்தெட்டாம். மூலவர் - நீலமேகப்பெருமாள், சௌரிராஜன், நின்ற திருக்கோலம், கிழக்கே திருமுக மண்டலம், தாயார் - கண்ணபுரநாயகி, தீர்த்தம - நித்யபுஷ்கரிணி, விமானம் - உத்பலாவதக விமானம். இத்தலத்திறைவனது திருக்காட்சி கிடைக்கப் பெற்றவர்கள் கருடன், கண்வமுனிவர், தண்டக முனிவர் ஆவார்.

ரங்கபட்டர் என்கிற அர்ச்சகர் சோழ அரசனுக்கும் பெருமாளுக்கும் கேசம் வளர்த்ததைக் காட்டுவதாக வாக்களித்ததைக் காப்பாற்ற, பெருமாள் திருமுடியில் திருக்குழற்கற்றையை வளர்த்துக் கேசத்தைக் காட்டியருளியதால் சௌரிராஜன் என்ற பெயர் உண்டாயிற்று (Srivatsan, 1990).

பெருமான் தன் சக்ராயுதத்தால் வீகடாஷன் என்ற அசுரனை அழித்து முனிவர்கள் பிரார்த்தனைப்படி சக்ரபிரயோக நிலையினனாய்ச் சேவை சாதிக்கும் தலமிதுவாம்.

முனியதரையர் என்னும் பக்திமான் அர்த்தசாமத்திற்கு மேல் கோயிலில் போக முடியாத நிலையில் இறைவனுக்கு மானசீகமாகப் பொங்கல் படைக்க, இறைவன் அதனை ஏற்று, மூடிய கோவில்தனில் மணிஓசை கேட்டு வெண்பொங்கல் வாசனை வீசியதால், அது முதல் அர்த்தஜாமப் பொங்கல் நிவேதனத்திற்கு 'முனியோத்ரம் பொங்கல்' என்ற பெயர் வரலாயிற்று என்பர்.

பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரர், திருமங்கை, நம்மாழ்வார் ஆகியோர் மொத்தம் நூற்று இருபத்தெட்டுப் பாசுரங்களால் இத்தலத்திறையை ஆராதிக்கிறார் (Srivatsan, 1990).

## திருமங்கை பாசுரங்களில் திருக்கண்ணபுரம்

திருக்கண்ணபுரத்தின் இயற்கை எழிலினைப் பின்வருமாறு நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆழ்வார் திருமங்கையார். திருக்கண்ணபுரச் சோலைகளில் கடிதமலர்கள் கள்ளுகுக்கின்றன. கார்வானம் நின்றதிர்கின்றது. நீலமலர்களைத் தாங்கியிருக்கும் சோலைகளில் வண்டுகள் வந்து தேனுண்டு பாட்டிசைக்கின்றன (Annangaracharia r, 1956).

ஆழ்வார் திருமங்கை இத்தலத்தை அதன் வயல்வளத்தை,

"காரால் வயலமரும் கண்ணபுரம்

முடிபுக்கு நெடுவயல் படைசெல அடிமலர்

கடிபுல்கு கணபுரம்."

"கூரார் ஆரல்இரை கருதிக்

குருகு பாயக் கயலிரியும்

காரார் புறவில் கண்ணபுரம்"

"உவரி யோதம் முத்துந்த

ஒருபால், ஒருபால் ஒண்செந்நெல்

கவரி வீசும் கண்ணபுரத்து”

எனப் பலவாறு பல காட்சிகளைக் காட்டிச் செல்கிறார் (Annangarachariar, 1956).

இத்தலத்து பாடங்கள் விண்ணுயரம் கொண்டவை. அம்மாடங்களில் வான்மேகங்கள் வந்து தோய்கின்றன (Annangarachariar, 1956).

“தூங்கமா மணிமாட நெடுமுகட்டின் சூலிகை போம்

திங்கள்மா முகில் துணிக்கும் திருக்கண்ண புரம்”

இத்தலத்தையும், இத்தலத்திறையையும் ஆழ்வார் ஒருசேரப் புகழ்ந்து மேலும் மேலும் இத்தலத்தின் பெருமையை உயர்த்துகிறார் (Annangarachariar, 1956).

திருக்கண்ணபுரத்தானைக் கண்டவர்கள் மயங்கி - உகந்து தமது உள்ளத்தை அவனுக்கே தந்திடுவர். நான்முகன் முதலான தேவர்களும், மண்ணுலகத்தாரும் வந்து வணஞ்கி இத்தலத்திறையை இறைஞ்சுகின்றனர் என்கிறார் (Annangarachariar, 1956).

## திருப்பாற்கடல்

எம்பெருமான் வாசுதேவ, சங்கிருஷ்ண, ப்ரத்யும்ன, அநிருத்தனாகப் பிரிந்து வியூக நிலையில், இவ்வுலகினைப் படைதது, காத்து அழிக்கும் - அரியதொரு செயலியற்றும் அற்புதத் தலமாகும். நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இத்தலமும் ஒன்றாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இத்தலம், யோகிகளும், முனிவர்களும், அமரர்களும் இருந்த இடத்திலேயே இருந்து பரம்பொருளை எண்ணி வழிபாடு செய்யும் இடமாகும். இத்தலத்தில் எழுந்தருளி இருப்பவன் பாற்கடல் நாதன். தாயார் கடல்மகளாவாள் (Annangarachariar, 1956).

## திருமங்கையாழ்வார் பாசுரங்களில் திருப்பாற்கடல்

திருமங்கையாழ்வார் தம் பாசுரங்களில் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுக் காட்டிச் செல்கிறார் (Loganayagi, 1992).

## திருப்பரமபதம்

நித்யசூரிகள் அனுபவிக்கும்படிக்கு வைகுந்தம் என்னும் திருநாடுதனில் முழுமுதற்பொருள் எழுந்தருளி இருக்கிறான். வைணவத் திருத்தலங்களுள் இதுவுமொன்றாம். இத்தலம் இந்நிலவுலகத்தில் இல்லாத ஒன்றாகும்.

இறை-பரமபதநாதன், தாயார் - பெரியபிராட்டியார், விமானம்-அநந்தரங்க விமானம், தீர்த்தம-விரஜாநதி, கருட விஷ்வக்ஸேநாதி நித்ய ஸூரிகட்கும் முக்தர்கட்கும் இத்தலத்திறையினது திருவுருவக்காட்சி கிடைத்ததென்பர் (Loganayagi, 1992).

ஆழ்வார்கள் மொத்தம் முப்பத்தாறு பாசுரங்களால் இத்தலத்தைப் பாடிப் பரவியுள்ளனர் (Loganayagi, 1992). இத்தலத்தை ஆழ்வார் திருமங்கையார் பின்வருமாறு பாடிப் பரவசமுறுகிறார்.

“அண்டமாய் எண்நி நிசைக்கும்

ஆதியாய் நீதியான”

இவ்வுடலை விட்டுப் பிரியும் ஆன்மா கதிரவன் மண்டலத்தைப் பிளந்து கொண்டு அவ்வழியே சென்று பரமபதம் என்னும் நாட்டை அடைவதாகவும் அங்கே ஆராவமுதத்தை அனுபவிப்பதாகவும்,

அவ்விடத்தை விட்டு ஒருநாளும் திரும்பி வருவதில்லை எனவும், அதுவே வைகுந்தம் என்பதென்றும் திருமங்கை குறிப்பிடுகின்றார் (Loganayagi, 1992).

## முடிவுரை

திருமங்கையாழ்வார் ஒரு சிறந்த வைணவ பக்தர் என்ற செய்தி அவரது இறை நெறி வாழ்வு மூலம் தெளிவு செய்யப்பெறுகிறது. அவர் பாடிய பாசுரங்கள், ஆழ்வார் அவற்றைப் பாடியருளிய சூழல், மடல், தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை ஆகியவற்றின் யாப்பமைப்புக்கள் அவை ஆழ்வார் பாசுரங்களில் அமைந்த பாங்கு விளக்கப்பெறுகின்றன.

## References

Annangaracharіar, (1956) Thirumangai Mannan Thiruvai Malarantharuliya periya Thirumozhi, Rathinam Brothers, Chennai, India.

Baskara Thondaimaan, (1964) Venkadam muthal Kumari varai, Balasubramanian Pathippagam, Tirunelveli, India.

Loganayagi, (1992) Thirumangai Alwar valarththa Bakthi Perum Peyar, Saradha Pathippagam, Chennai, India.

Ramu, K. (2013) Alwargalin tamil amutham, Manivasagar Pathippagam, Chennai, India.

Srinevasa Iyer, (1982) 108 Tirupati Anthathi, U.V.S. Library, Chennai, India.

Srivatsan, (1990) Naalayira Divya Prabandham, The little flower company, Chennai India.

Subbu Chettiyar, N. (1981) Chola Nattu thirupathikal, Vasudevan Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License